

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம், ஊத்தங்கரை மற்றும் பர்கூரில் நடைபெற்ற சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பில், பயனாளிகளுக்கு தாலிக்கு தங்கம் மற்றும் திருமண உதவித்தொகைக்கான பற்று அட்டைகளை உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி வழங்கினார். உடன் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் மதியழகன், மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார் மாவட்ட சமூக நல அலுவலர் சக்தி சுபாசினி, மாநில மகளிர் ஆணைய உறுப்பினர் மாலதி நாராயணசாமி, மாநில வர்த்தக அணி துணை செயலாளர் சீனிவாசன், அன்பரசன் உள்ளிட்ட பலர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க திராவிட பொங்கல் பண்டிகையை முன்னிட்டு இளைஞர்கள் மற்றும் மகளிருக்கான விளையாட்டு போட்டி நடத்துவது சம்பந்தமாக வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை அமைச்சர் சு.முத்துசாமி ஆலோசனை வழங்கி பேசினார். கூட்டத்தில் ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், மாவட்ட நிர்வாகிகள் ஆ.செந்தில்குமார், க.சின்னையன் , செல்லபொன்னி, மாநகர கழக செயலாளர் மு.சுப்ரமணியம், உள்ளிட்ட ஒன்றிய, பகுதி கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

# குன்னூரில் மழையால் பாதிப்புகள் ஏற்பட்ட பகுதிகள்!

## அரசு தலைமை கொறடா கா.ராமசந்திரன் ஆய்வு மேற்கொண்டார்!

உதகை, ஜன. 5 -

நீலகிரி மாவட்டத்தில் கடந்த 2 ஆம் தேதி இரவு நேரத்தில் திடீரென கன மழை பெய்தது. குறிப்பாக எடப்பள்ளி, மரப்பாலம், அருவங்காடு, கரும்பாலம் போன்ற பகுதிகளில் விடிய விடிய கனமழை கொட்டி தீர்த்தது. மேலும் கனமழையால் குன்னூர் நகர பகுதியான மாடல் ஹவுஸ் பகுதியில் குடியிருப்பு பகுதியில் வெள்ளம் போல் மழைநீர் சூழ்ந்தது. அதில் ஒரு வீட்டின் மேற்கூரையிலிருந்து மழைநீர் ஆர்பரித்து கொட்டியது. இதனிடையே உழவர்சந்தை அருகே சுமார் 40 அடி உயரத்திலிருந்து மண் சரிந்து விழுந்தது. இதனால் சாலையோரத்தில் நிறுத்திவைக்கப்பட்ட 3 இரு சக்கர வாகனங்கள் உட்பட 2 கார்களின் மீது மண் மற்றும் செடி, கொடிகள் விழுந்து முற்றிலும் சேதமானது.



அதேப்போல் ராணுவ பகுதிக்கு செல்லும் வேளாங்கன்னி நகர் பகுதியில் மண் சரிந்து சாலையில் விழுந்ததால் அவ்வழியாக போக்குவரத்து தடைசெய்யப்பட்டது.

இதேப்போல் பல்வேறு பகுதிகளில் பலத்த சேதம் ஏற்பட்டது. மேலும் பல்வேறு பகுதிகளில் சேதமடைந்த இடங்களை நேற்று முன்தினம் மாவட்ட ஆட்சியர் லட்சுமி பவ்யா தண்ணீரு தலைமையிலான அரசு அதிகாரிகள் ஆய்வு மேற்கொண்டு, சீரமைப்பு பணிகளை துரிதபடுத்த உத்தரவிட்டனர். மேலும் தற்போது வரை உழவர் சந்தை, வேளாங்கன்னி நகர் பகுதியில் சீரமைப்பு பணிகள் நடைபெற்று வரும் நிலையில், நேற்று குன்னூரில் பாதிப்புகள் ஏற்பட்ட இடங்களில் அரசு தலைமை கொறடா கா.ராமசந்திரன், திமுக மாவட்ட பொருப்பாளர் கே.எம்.ராஜூ ஆகியோர் ஆய்வு மேற்கொண்டனர். ராணுவ பகுதிக்கு செல்லும் வேளாங்கன்னி நகர் பகுதியில் ஏற்பட்ட பாதிப்புகளை விரைந்து முடிக்க வேண்டுமென்று நகராட்சி ஊழியர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. இந்த ஆய்வின் போது குன்னூர் நகர செயலாளர் ராமசாமி, நகராட்சி மேற்பார்வையாளர் பரமேஷ், மாநில சிறுபான்மை பிரிவு துணை செயலாளர் அன்வர் கான், நகர அவை தலைவர் தாஸ், நகரமன்ற உறுப்பினர் காவேரி உட்பட திமுக கிளை செயலாளர் ரஹீம் உட்பட திமுக நிர்வாகிகளும், நகராட்சி மற்றும் மின்வாரிய ஊழியர்கள் என பலர் உடனிருந்தனர்.

# திருப்போரூரில் தெருமுனைப் பிரச்சாரக் கூட்டம்!

திருப்போரூர், ஜன. 5 -

திருப்போரூர் சட்டமன்றத் தொகுதி திருப்போரூர் தெற்கு ஒன்றிய கழகத்தின் சார்பில் ஒன்றிய கழக செயலாளர்பையனூர்எம்.சேகர் தலைமையில் பாகம் எண் 189க்கு உட்பட்ட தண்டரை ஊராட்சிக்கு உட்பட்ட பகுதியில் தெருமுனை பிரச்சாரக் கூட்டத்தில்தொகுதிபார்வையாளர் எஸ்.எம்.கே.அண்ணாதுரை பங்கேற்று சிறப்புரையாற்றினார்.

நிகழ்ச்சியில்பாகஒருங்கிணைப்பாளர்ஓ.ஜே.மதுரைவேல் மாவட்ட கவுன்சிலர் டி.ஜெயச்சந்திரன், திருமலை, ராமகிருஷ்ணன், ஜி.கோபிநாத், கே.செல்வம், பாஸ்கர், லோகநாதன், சசிகலா, ரேவதி, நெல்சன், சின்னையா, ஜெயச்சந்திரன், ஏழுமலை, செல்வராஜ், வெங்கடேசன், துரை, கண்ணன், சுந்தர், குமார், கே.துரை, கடம்பாடி லிங்கேஸ், கோபால், சந்திரா, உஷா, கலைச்செல்வி, வசந்தி, சுந்தரி, லோகேஸ்வரன், நந்தகோபால் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் மற்றும் ஏராளமான மகளிர் கலந்து கொண்டனர்.

# வானிலை (அரசியல்) அறிக்கை!



2026 மே....

தி.மு.க..
தொடர்ந்து ஆட்சியில்...

அ.தி.மு.க.
அருங்
காட்சியில்

த.வெ.க...
சினிமா
காட்சியில்..

இது தான்
சூழலாக
இருக்கப் போகிறது..

**என்னநாஞ் சொல்றது**



**மருது அழகுராஜ்**
கழக செய்தித் தொடர்புக் குழு
துணைத் தலைவர்



சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் சேலம் மாவட்டம், அஸ்தம்பட்டி மண்டலம், வரட்டாறு பகுதியில் ஏடிசி நகர் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள புதிய பாலத்தினை நேற்று முன்தினம் (03.01.2026) திறந்து வைத்தார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி, சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.செல்வகணபதி, சேலம் மாநகராட்சி மேயர் ஆ.ராமச்சந்திரன், சேலம் மேற்கு சட்டமன்ற உறுப்பினர் இரா.அருள், மாநகராட்சி ஆணையாளர் மா.இளங்கோவன், துணை மேயர் திருமதி மா.சாரதாதேவி, மண்டல குழு தலைவர் திருமதி உமாராணி ஆகியோர் உள்ளனர்.

# ஈரோடு - சென்னை செல்லும் ஏற்காடு எக்ஸ்பிரஸ் ரயில் நேரம் மாற்றம்!

## கே.இ.பிரகாஷ் எம்.பி.க்கு பொதுமக்கள் நன்றி!

ஈரோடு, ஜன.5-

ஈரோட்டில் இருந்து சென்னை வரை செல்லும் ஏற்காடு எக்ஸ்பிரஸ் ரயில் இரவு 9 மணிக்கு பதிலாக 9.45 மணியாக நேரத்தை மாற்றி அமைத்திடக்கோரி வியாபாரிகள், பொதுமக்கள் என பல்வேறு தரப்பு மக்களின் கோரிக்கையை ஏற்று ஈரோடு தெற்கு மாவட்ட கழக செயலாளரும், வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சருமான சு.முத்துசாமி ஆலோசனையின் பேரில் ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ. பிரகாஷ் நாடாளுமன்றத்திலும், ஒன்றிய ரயில்வே அமைச்சரிடமும் கோரி க்கை மனு வழங்கினார்.

இதனை ஏற்றுக்கொண்டு தற்போது 9.45 கங்கு மாற்றி அமைக்கப்பட்ட நேரத்தில் ஈரோட் டில் இருந்து சென்னை புறப்பட்ட ரயிலை ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ் கொடி அசைத்து துவக்கி வைத்தார்.

ஈரோடு டூ சென்னை செல்லும் ஏற்காடு எக்ஸ்பிரஸ் ரயில் நேரம் மாற்றியதற்க்கு வியாபாரிகள், பொதுமக்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினர் ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷுக்கு நன்றி தெரிவித்தனர்.

நிகழ்வில் ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி. சந்திரகுமார், மாவட்ட பொருளாளர் ப.க.பழனிச்சாமி, பொன்னுச்சாமி, பகுதி கழக செயலாளர் அக்னி டி.சந்திரசேகரன், காயத்ரி இளங்கோவன், மாமன்ற உறுப்பினர் சக்திவேல், கே.டி.சேந்தபுகழன், காங்கிரஸ் மாவட்ட செயலாளர் திருச்செல்வம் உள்ளிட்ட மாநில, மாவட்ட, மாநகர, பகுதி கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



ஈரோட்டில் இருந்து சென்னை வரை செல்லும் ஏற்காடு எக்ஸ்பிரஸ் ரயில் இரவு 9 மணிக்கு பதிலாக 9.45 மணி ஆக நேரத்தை மாற்றி அமைத்திடக்கோரி வியாபாரிகள் பொதுமக்கள் என பல்வேறு தரப்பு மக்களின் கோரிக்கையை ஏற்று ஈரோடு தெற்கு மாவட்ட கழக செயலாளரும், வீட்டுவசதி, நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சருமான சு.முத்துசாமியின் ஆலோசனையின் பேரில் ஈரோடு நாடாளுமன்ற தொகுதி உறுப்பினர் கே.இ.பிரகாஷ் நாடாளுமன்றத்திலும், ஒன்றிய ரயில்வே அமைச்சரிடமும் கோரிக்கை மனு வழங்கினார். இதனை ஏற்றுக்கொண்டு தற்போது மாற்றி அமைக்கப்பட்ட நேரத்தில் ஈரோட்டில் இருந்து சென்னை புறப்பட்ட ரயிலை கே.இ.பிரகாஷ் எம்.பி. கொடி அசைத்து துவக்கி வைத்தார். இந்நிகழ்வில் சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், ப.க.பழனிச்சாமி, பொன்னுச்சாமி, பகுதி கழக செயலாளர் அக்னி டி.சந்திரசேகரன், லட்சுமண குமார், காயத்ரி இளங்கோவன், மாமன்ற உறுப்பினர் சக்திவேல், கே டி. சேந்தபுகழன், காங்கிரஸ் மாவட்ட செயலாளர் திருச்செல்வம் உள்ளிட்ட மாநில மாவட்ட மாநகர பகுதி பட்ட கழக நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



தருமபுரி மேற்கு மாவட்டம் பாப்பிரெட்டிப்பட்டி மோளையானூர் ஊராட்சியில் நடைபெற்ற வாக்காளர் பட்டியல் திருத்த சிறப்பு முகாமில் திமுக தருமபுரி மேற்கு மாவட்ட செயலாளர் முனைவர்.பி.பழனியப்பன் வாக்காளர் சேர்த்தல்,நீக்கல் உள்ளிட்ட பணிகளை ஆய்வு செய்தார்.உடன் ஒன்றிய செயலாளர் சி.முத்துக்குமார்,உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் உள்ளனர்.



நாகை மாவட்ட திமுக செயற்குழு கூட்டம் மாவட்ட திமுக அலுவலகத்தில் நடைபெற்றது. கூட்டத்தில் மாவட்ட கழக செயலாளர் தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழக தலைவர் என்.கௌதமன் பேசினார். உடன் தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ப. கோவிந்தராஜன், க.இராஜேந்திரன் மாவட்ட கழகப் பொருளாளர் மு.லோகநாதன் ஆகியோர் உள்ளனர்.